குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

திருச்செங்கோடு

முன்னிலை:– திரு. P. ரங்கராஜ், B.A.B.L.,

நீதித்துறை நடுவர், திருச்செங்கோடு

ஆண்டுபட்டிகை வழக்கு எண்.369/2025

CNR.No. TNNM08-000552-2025

2026– ம் ஆண்டு ஜுன் திங்கள் 17–ம் நாள் புதன்கிழமை

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் | அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>PEW திருச்செங்கோடு,<br>குற்ற எண்.543/2024 |
| குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் முகவரி | ரத்தினசாமி (44)<br>த/பெ.வையாபுரி,<br>2/1, கோம்பை நகர், சேலம் ரோடு, திருச்செங்கோடு |
| வனையப்பட்ட குற்றங்கள் | சட்டப் பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024 |
| குற்றம் நிகழ்ந்த நாள் | 30.08.2024 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | 30.08.2024 (Bailed by police) |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 20.09.2025 |
| பிரிவு 263 BNSS ன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | 18.02.2026 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | 12.05.2026 |
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | 12.05.2026 |
| பிரிவு 351(1)(ஆ) BNSS இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட | 26.05.2026 |

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.17 17:45:09 +0530

| | |
|---|---|
| நாள் | |
| தலைமறைவு எதிரி குறித்த விவரம் | Nil |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | Nil |
| முடிவு | இவ்வழக்கின் எதிரி சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, பிரிவு 271(1) -BNSS ன் கீழ் எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இவ்வழக்கானது 25.09.2025 - ம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் அ. உதயபானு, B.com.,B.L., நிலை 2 அவர்களும், எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு.K,நாகராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்டு ஆவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

01) கடந்த 30.08.2024 – ம் தேதி 9.00 மணிக்கு திருச்செங்கோடு ஊரக காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட கருவேப்பம்பட்டி விநாயகா லாரி பட்டறை செல்லும் வழியில் உள்ள புளியமரம் அருகே எதிரி ரத்தினசாமி என்பவர், அரசின் எவ்வித முன் அனுமதியோ உரிமமோ இல்லாமல் 180 ML அளவுகொண்ட Black Pearl Brandy -28 அரசு மதுபான பாட்டில்கள் விற்பனைக்காக வைத்திருந்ததாக, தமிழ்நாடு மதுவிலக்கு அமலாக்க

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.06.17 17:45:17 +0530

சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendement Act- ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என திருச்செங்கோடு மதுவிலக்கு அமல் பிரிவு காவல் உதவி ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02) மேற்கண்டவாறு தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையை பரிசீலனை செய்து வழக்கை கோப்பிற்கு எடுத்துக்கொண்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், இந்த வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களின் நகல்கள் யாவும் எதிரிக்கு பிரிவு 230 BNSS ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**குற்றச்சாட்டுகள்:-**

03) இந்த வழக்கு ஆவணங்கனை பரிசீலனை செய்ததில் இருந்தும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும் எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைய போதுமான முகாந்திரங்கள் இருப்பதாக தெரிய வந்ததால், இவ்வழக்கின் எதிரி மீது பிரிவுகள் 4(1)(C) TNP Amendment Act 2024 – ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து அதனை எதிரிக்கு படித்துக்காட்டி விளக்கிக் கூறி வினவியபோது பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும் பதில் கூறினார். எனவே, இந்த வழக்கில் அரசு தரப்பை மெய்ப்பிக்க வேண்டி சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

04) இவ்வழக்கில் புகார்தாரரான திருச்செங்கோடு மதுவிலக்கு அமல் பிரிவு காவல் உதவி ஆய்வாளர் அ.சா.3/திருமதி.சங்கீதா என்பவர் தலைமைக்காவலர்கள் திரு.பாக்கியராஜ் மற்றும் திரு.சதீஷ்குமரன் ஆகிய போலீஸ் பார்ட்டியுடன் கடந்த 30.08.2024 - ம் தேதி காலை சுமார் 9.00 மணியளவில் மதுவிலக்கு ரோந்து அலுவல் சம்பந்தமாக திருச்செங்கோடு ஊரக காவல் நிலைய சரகம் கருவேப்பம்பட்டி விநாயகா லாரி பட்டறை புளியமரம் அருகே கண்காணித்துக் கொண்டு போகும்போது எதிரியானவர்

RANGARAJ P Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.17 17:45:25
+0530

போலீஸ் பார்ட்டியாகிய தங்களை கண்டதும் தப்பி ஓட எத்தனித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்து அவர் கையில் வைத்திருந்த பையை சோதனை செய்தபோது அதில் 180 ML அளவு கொண்ட Black Pearl Brandy -28 பாட்டில்கள் வைத்திருந்ததாகவும், விசாரணையில் மதுபாட்டில்களை டாஸ்மாக் கடையில் வாங்கி சுய லாபத்திற்கு அதிக விலைக்கு, விற்பதற்காக வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காவல்படுத்தி தனிநபர் சாட்சியம் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் மேற்கண்ட தலைமைக்காவலர்கள் திரு.பாக்கியராஜ் மற்றும் திரு.சதீஷ்குமரன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர்/**அ.சா.ஆ.1** –ல் கைப்பற்றி எதிரியை காரணம் கூறி காவல் நிலையம் அழைத்து வந்து நிலைய குற்ற எண்.543/2024 ச.பி. 4(1)(C) TNP Amendement Act –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை/ **அ.சா.ஆ.2** பதிவு செய்துள்ளார். பின்னர் கைப்பற்றிய அரசு மதுபான பாட்டில்களை G.O M.S) No.39, dt: 22.10.2019 Home prohibition and excise (VIII) Department –ன் படி உதவி ஆணையாளர் கலால், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம் அவர்களின் மேல்நடவடிக்கைக்காக வேண்டுகோள் கடிதம்/**அ.சா.ஆ.3** கொடுத்து கைப்பற்றிய மதுபாட்டில்களை கலாலுக்கு அனுப்பிவைத்துள்ளார். பின்னர் எதிரியை தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார். தலைமைக்காவலர்கள் திரு.பாக்கியராஜ் மற்றும் திரு.சதீஷ்குமரன் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது ச.பி. 4(1)(C) TNP Amendement Act-ன் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

05) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை,

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.06.17 17:45:32 +0530

சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பிலும் சான்று பொருட்கள் ஏதும் குறியிடப்படவில்லை.

06) அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து எதிரியை பிரிவு 351(1)(ஆ) BNSS –ன்படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் பதில் கூறியுள்ளார்.

07) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது, அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

08) எதிரிதரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கு எதிரி மீது புள்ளி விவர கணக்கிற்காக பொய்யாக போடப்பட்டது என்றும், எதிரியிடமிருந்து எந்த மதுபானத்தையும் போலிசார் கைப்பற்றவில்லை என்றும், இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபானம் எதுவும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை என்றும், இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகளாக சம்பவ இடத்தில் வசிக்கும் பொதுமக்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றும், போலிசார்களையே சாட்சிகளாக கொண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளதாகவும், எதிரியை விடுதலை செய்யுமாறும் வாதிட்டார்.

**தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

09) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரி மீது அரசுத் தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.17 17:45:39 +0530

## தீர்வு

10) எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளான பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024-ன் கீழான குற்றத்தை நிரூபிக்க வேண்டுமென்றால், எதிரி சட்டவிரோதமான வகையில் அரசின் அனுமதியின்றி அதிகலாபமடைய வேண்டி அரசு மதுபானத்தை விற்பனைக்காக பதுக்கி வைத்திருக்கவோ அல்லது கடத்தி சென்றிருக்கவோ வேண்டும். எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை குறித்து பரிசீலித்ததில்,

11) இவ்வழக்கில் அ.சா.3/காவல் உதவி ஆய்வாளர் புகார்தாரராக இருந்து தானே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, விசாரணை அதிகாரியாகவும் இருந்து இறுதியறிக்கையும் தாக்கல் செய்துள்ளார். மேலும், இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகளாக பொதுமக்கள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்பதும், இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக எந்த ஒரு மதுபானத்தையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை என்பதும், இருதரப்பிலும் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளாக உள்ளது.

12) அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலித்ததில் அ.சா.1 தலைமைக்காவலர் திரு.பாக்கியராஜ் மற்றும் அ.சா.2 தலைமைக்காவலர் திரு.சதீஷ்குமரன் ஆகியோர் தங்களது சாட்சியத்தில், கடந்த 30.08.2024 ம் தேதி சுமார் 9.00 மணியளவில் மதுவிலக்கு ரோந்து அலுவல் சம்பந்தமாக திருச்செங்கோடு மதுவிலக்கு அமல் பிரிவு காவல் உதவி ஆய்வாளர் திருமதி. சங்கீதா அவர்களுடன் தாங்கள் இருவரும் திருசெங்கோடு ஊரக காவல் நிலைய சரகம் கருவேப்பம்பட்டி, விநாயகா லாரி பட்டறை புளியமரம் அருகே கண்காணித்து கொண்டிருந்தபோது ஒரு நபர் தங்களை கண்டதும் தப்பி ஓட முயன்றவரை சந்தேகத்தின் பேரில் அவரை பிடித்து விசாரிக்க அவர் தன் பெயர் ரத்தினசாமி என்றும் அவர் தன் கையில் வைத்திருந்த

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.17 17:45:46
+0530

பையை சோதனை செய்த போது 180 ml அளவு கொண்ட BLACK PEARL BRANDY - 28 பாட்டிகள் இருந்ததாகவும், காவல் உதவி ஆய்வாளர் அவரை விசாரிக்க அவர் மேற்படி மது பாட்டில்களை டாஸ்மார்க் கடையில் வாங்கி சுய லாபத்திற்கு அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருந்ததாக தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காவல்படுத்தி பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராத காரணத்தினால் தங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் மேற்படி வழக்கு சொத்துக்களை கைப்பற்றினார் என்றும், அதில் தாங்கள் இருவரும் சாட்சியாக கையெழுத்து செய்ததாகவும், பின்னர் எதிரியை நிலையம் அழைத்து வந்து நிலைய குற்ற எண். 543/2024 ச/பி. 4(1)(C) TNP Amendement ACt-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், பின்னர் கைப்பற்றிய அரசு மதுபான பாட்டில்களை G.O M.S) No.39, Dtd 22.10.2019 Home prohibition and excise (VIII) Department ன் படி உதவி ஆணையாளர் கலால், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம் அவர்களின் மேல் நடவடிக்கைக்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்து கைப்பற்றிய மதுபாட்டில்களை கலாலுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் சாட்சியமளித்துள்ளனர்.

13) ஆனால் அ.சா.1–ம், அ.சா.2–ம் தங்களது குறுக்குவிசாரணையில், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் பொதுமக்கள் யாரும் மதுபானம் விற்பனை நடந்ததாக தங்களுக்கு தகவல் எதுவும் கொடுக்கவில்லை என்றும், சம்பவ இடம் தனியார் இடம் என்றும், அதன் உரிமையாளரையும் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை என்றும், மேலும் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபான பாட்டில்களின் மீதுள்ள அரசு முத்திரையுடன் கூடிய ஸ்டிக்கர்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றும், மேலும் கைப்பற்றப்பட்ட மதுபான பாட்டில்களை புகைப்படம் எடுத்தோ, வீடியோ பதிவுகள் எடுத்தோ நீதிமன்றத்தில்

RANGARAJ P Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.17 17:45:55
+0530

தாக்கல்செய்யவில்லை எனவும் சாட்சியமளித்துள்ளனர். எனவே உண்மையில் மதுபான பாட்டில்கள் கைப்பற்றப்பட்டிருப்பின் அதை செல்போனில் புகைப்படம் எடுத்து தாக்கல்செய்ய வாய்ப்புள்ள நிலையில் அவ்வாறு புகைப்படம் எதுவும் அரசுதரப்பில் தாக்கல்செய்யாதது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

14) அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 30.08.2024– ம் தேதி சுமார் 9.00 மணியளவில் மதுவிலக்கு ரோந்து அலுவல் சம்பந்தமாக அ.சா.1, அ.சா.2 உடன் திருச்செங்கோடு ஊரக காவல் நிலைய சரகம் கருவேப்பம்பட்டி விநாயகா லாரி பட்டறை புளியமரம் அருகே கண்காணித்து கொண்டிருந்தபோது ஒரு நபர் தங்களை கண்டதும் தப்பி ஓட முயன்றவரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்து அவர் வைத்திருந்த பையை சோதனை செய்தபோது அவர் 180 ml அளவு கொண்ட Black Pearl Brandy -28 பாட்டில்களை டாஸ்மாக் கடையில் வாங்கி சுய லாபத்திற்கு அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருந்ததாக குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காவல்படுத்தி மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் மேற்படி வழக்கு சொத்துக்களை கைப்பற்றி, பின்னர் எதிரியை நிலையம் அழைத்து வந்து நிலைய குற்ற எண். 543/2024 ச/பி. 4(1)(C) TNP Amendement Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், பின்னர் கைப்பற்றிய அரசு மதுபான பாட்டில்களை உதவி ஆணையாளர் கலால், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம் அவர்களின் மேல் நடவடிக்கைக்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பிவைத்ததாகவும், பின்னர் எதிரியை தக்க பிணையில் விடுவித்ததாகவும், பின்னர் எதிரி மீது மேற்படி பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

15) மேலும் அ.சா.3 தனது குறுக்குவிசாரணையில் எதிரி மதுபான பாட்டில்களை வைத்திருந்ததாக சொல்லப்படும் சாக்குப்பையை தான் கைப்பற்றவில்லை என்றும், எதிரியிடமிருந்து மதுபானம் வாங்கிய நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், எதிரி மதுபானம் விற்றதாக தனக்கு

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.06.17 17:46:02 +0530

தனிப்பட்ட புகார் எதுவும் வரவில்லை என்று சாட்சியமளித்துள்ளார். எனவே உண்மையில் எதிரி மதுபானத்தை அதிக லாபத்திற்கு விற்பனை செய்திருந்தால் எதிரி விற்பனை செய்து வைத்திருந்த தொகையையோ அல்லது எதிரியிடம் மதுபானம் வாங்கிய நபர்களையோ சாட்சியாக சேர்த்திருக்க வாய்ப்புள்ளது. அவ்வாறு எந்த தொகையையும் எதிரியிடமிருந்து கைப்பற்றாததாலும், எந்த தனி நபர்களையும் சாட்சிகளாக விசாரிக்காததாலும் உண்மையில் சம்பவம் நடந்ததா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

16) மேலும் மேற்படி பரிசீலனையிலிருந்து எதிரி மதுபான பாட்டில்களை எந்த கடையில் இருந்து விலைக்கு வாங்கிவந்தார் என்பது குறித்து விசாரித்து அந்த கடையின் ஊழியர்களை சாட்சியாக சேர்க்கவோ, புலன்விசாரணை அதிகாரி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும் எதிரி மதுபானம் வைத்திருந்ததாக சொல்லப்படும் பையை கைப்பற்றியதாக அ.சா.1, அ.சா.2 வரையானவர்கள் சாட்சியமளித்துள்ளார்கள். ஆனால் அ.சா.3 மதுபான பாட்டில்களை வைத்திருந்த சாக்குபையை தான் கைப்பற்றவில்லை என்று சாட்சியமளித்துள்ளார். இது முரண்பாடாக உள்ளது. மேலும் கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலித்ததில் மதுபானம் வைத்திருந்ததாக எந்த பையையும் கைப்பற்றியதாக எந்த குறிப்பும் காணப்படவில்லை. எனவே மதுபானம் வைத்திருந்ததாக சொல்லப்படும் பையை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாதது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும் இந்த வழக்கில் சம்பவ இடம் குறித்து பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார்செய்யப்படவில்லை. எதிரியிடமிருந்து தனிநபர் சாட்சிகள் முன்பாக எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பதிவுசெய்யப்படவில்லை. இது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.17 17:46:08 +0530

17) எனவே உண்மையில் சம்பவ இடத்திற்கு சம்பவ நாளில் அ.சா.1, அ.சா2 அ.சா.3 ஆகியோர் ரோந்து பணிக்கு சென்றார்களா, எதிரியிடமிருந்து சம்பவ இடத்திலிருந்து மதுபான பாட்டில்களை கைப்பற்றினார்களா என்ற சந்தேகம் எழுகிறது. எனவே அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்களின் சாட்சியத்தைக்கொண்டு எதிரியை 4(1)(C) TNP Amendement ACt- படி தண்டிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியம் ஒன்றுக்கொன்று முரண்பாடாக உள்ளது, நம்பும்படியாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18) மேலும், இவ்வழக்கு எதிரி மீது புள்ளி விவர கணக்கிற்காக பொய்யாக போடப்பட்டுள்ளது என்றும் இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரியே புகார்தாரராக இருந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, விசாரணை அதிகாரியாகவும் இருந்து இறுதியறிக்கையும் தாக்கல் செய்துள்ளார் என்றும், இது சட்ட முரணாக உள்ளதாகவும், உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் தனிநபர் சாட்சியங்களை விசாரித்திருக்க வாய்ப்புள்ளது எனவும், இது பொய்யான வழக்கு என்பதால் தான் தனிநபர் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என எதிரிதரப்பில் வாதிடப்பட்டது. அது ஏற்புடையதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

19) எனவே, மேற்படி ஆய்வுகளின்படி எதிரி மீதான குற்றச்சாட்டை அரசுதரப்பு சாட்சிகள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20) முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கின் எதிரி பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, பிரிவு 271(1) BNSS –ன் கீழ் எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.17 17:46:15 +0530

21) இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றவில்லை, எனவே, அதுகுறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

22) எதிரி இவ்வழக்கில் எழுதிக்கொடுத்த பிணைமுறி பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 17–ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரபட்டது.

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.06.17 17:46:20 +0530

நீதித்துறை நடுவர்,
திருச்செங்கோடு.

**அரசு தரப்பு சாட்சிகள்.–**

| Prosecution Witness No | Name of Witnesses | Description |
|---|---|---|
| அ.சா.1 /LW1 | திரு. பாக்கியராஜ் | தலைமை காவலர் |
| அ.சா.2/LW2 | திரு.சதீஷ்குமரன் | தலைமை காவலர் |
| அ.சா.3/LW3 | திருமதி.சங்கீதா, | காவல் உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்.–**

| Exhibit No | Description of the Exhibit | Proved by / Attested by |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.1 – 12.05.2026 |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 – 12.05.2026 |
| அ.சா.ஆ.3 | கைப்பற்றிய மதுபான பாட்டில்களை உதவி ஆணையர் கலால், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம் அவர்களின் மேல் நடவடிக்கைக்காக வேண்டுகோள் கடிதத்துடன் கலாலுக்கு அனுப்பிவைக்கப்பட்டதற்கான கடிதத்துடன் | அ.சா.3 – 12.05.2026 |

| | | |
|---|---|---|
| | கூடிய அரசாணை மற்றும் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களின் பட்டியல் நகல். | |

அரசு தரப்பு சான்று பொருள்.– இல்லை.

குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தரப்பு சாட்சி, சான்றாவணம்.– இல்லை.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.17 17:46:26 +0530

நீதித்துறை நடுவர்,
திருச்செங்கோடு.

<u>குறிப்பு.–</u>

1. எந்தவொரு சாட்சியும் மூன்று தினங்களுக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.
2. வழக்கு விசாரணையின்போது குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பிணையிலிருந்தார்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE**

CASE SUMMARY- CC.No.369/2025

<table>
<tr><th>S.No.</th><th>Description</th><th>Remarks</th></tr>
<tr><td>1.</td><td>Period of Remand of the Accused</td><td>Bailed by police (30.08.2024)</td></tr>
<tr><td>2.</td><td>The Date of Filing of the Complaint/Final Report of the Court</td><td>Complaint – 30.08.2024<br>Final Report on 20.09.2025</td></tr>
<tr><td>3.</td><td>The Date of Committal of the Case to the Court of Session</td><td>Nil</td></tr>
<tr><td>4.</td><td>The Date of Questioning of the Accused under sections 263 BNSS, as the case maybe</td><td>18.02.2026</td></tr>
<tr><td>5.</td><td>Filing of Miscellaneous Petitions an their results on challenge before superior Court. Except routine petitions like petitions Under Section 355 of the BNSS</td><td>Nil</td></tr>
<tr><td>6.</td><td>Date of examination in-chief and cross-examination of a Witness</td><td><table>
<tr><th>Witness</th><th>Chief</th><th>Cross</th></tr>
<tr><td>PW.1</td><td>12.05.2026</td><td>12.05.2026</td></tr>
<tr><td>PW.2</td><td>12.05.2026</td><td>12.05.2026</td></tr>
<tr><td>PW.3</td><td>12.05.2026</td><td>12.05.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>7.</td><td>Date of examination of the Accused under section 351(1)(b) of the BNSS</td><td>26.05.2026</td></tr>
<tr><td>8.</td><td>Details of abscondence of an Accused and his appearance/production, as the case maybe</td><td>Nil</td></tr>
<tr><td>9.</td><td>Grant of stay by Superior Courts and the results thereof</td><td>Nil</td></tr>
</table>

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.17 17:46:32 +0530

Judicial Magistrate,
Tiruchengode.